**செ.வெ.எண்-32** **நாள்-14.03.2019**

# நாடாளுமன்ற தேர்தலையொட்டி, அமைக்கப்பட்டுள்ள பறக்கும் படையினர் வாகன சோதனை செய்யும் பணியினை தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப., அவர்கள் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், சாத்தமங்கலம் கிராமத்தில் இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்ற பொதுத்தேர்தல் - 2019 தேதி அறிவித்து 10.03.2019 முதல் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலுக்கு வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, அமைக்கப்பட்ட தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனை செய்யும் பணியினை தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் இன்று (14.03.2019) பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

27.சிதம்பரம் (தனி) நாடாளுமன்ற தொகுதி பொதுத்தேர்தல் 2019-க்காக அரியலூர் மாவட்டத்திலுள்ள இரண்டு சட்டமன்ற தொகுதிகளில் ஒரு தொகுதிக்கு மூன்று வீதம் 6 பறக்கும் படைக்குழுக்களும், 6 நிலையான கண்காணிப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் அரசியல் கட்சி பொதுக்கூட்டம் மற்றும் பிரச்சாரங்களை கண்காணிக்கவும் ஒவ்வொரு குழுவிலும் துணை வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி நிலை அலுவலர் தலைமையில் ஒரு காவல் சார்பு ஆய்வாளர், 3 காவலர்கள், 1 வீடியோ பதிவாளர் என மொத்தம் 6 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இக்குழு அலுவலர்கள் அந்தந்த பகுதிகளை தேர்தல் நன்னடத்தை விதி மீறல்கள் தொடர்பான கண்காணிப்பு பணியகளில் ஈடுபட்டு வருகின்றன. பறக்கும்படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டு, வாகனங்களில் பணமோ, பரிசுப்பொருட்களோ கொண்டு செல்கின்றனரா என்பதை ஆய்வு செய்வார்கள். பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்கள் குறைகளை தெரிவிக்க தேர்தல் தொடர்பான விளக்கங்களை பெறவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணிநேரம் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு மையம் தொலைபேசி எண்.04329-228605, 228606, 228607 ஆகிய எண்களை தொடர்பு கொண்டு புகார்கள் அளிக்கலாம். மேலும், கட்டணமில்லா தொலைபேசி எண்.**1800 425 2286 தொடர்பு கொள்ளலாம்.** சம்மந்தப்பட்ட கண்காணிப்பு குழு அலுவலர்களுக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ள பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக்குழு அலுவலர்கள் கண்காணிப்பு பணியில் விழிப்புடன் பணியாற்ற வேண்டும். கண்காணிப்பு பணியின்போது, உரிய ஆவணமின்றி பணம், பரிசுபொருட்கள் கைப்பற்றுகையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலை முறையே பின்பற்றிட வேண்டும்.

தற்போது, இந்திய தேர்தல் ஆணையம் தேர்தல் தொடர்பான புகார்களை பொதுமக்கள் புகைப்படம், வீடியோவுடன் எளிதில் தெரிவித்திடும் வகையில் cVIGIL என்ற செல்போன் செயலியினை அறிமுகப்படுத்தியுள்ளது. ஸ்மார்ட் போன் வைத்திருப்பவர்கள் இந்த செயலியினை கூகுல் பிளே ஸ்டோர் களத்திலும் அல்லது தேர்தல் ஆணையம் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து, பயன்படுத்தலாம். இந்த செயலியின் மூலம் பெறப்படும் புகார்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவரங்கள் சம்மந்தப்பட்ட நபருக்கு குறுஞ்செய்தியாக அனுப்பிடும் வகையில் இந்த செயலி செயல்படுத்தப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தஆய்வில், பறக்கும் படை அலுவலர் மற்றும் காவல் துறையினர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**